முருகப்பெருமான் துணை

**மகான் மஸ்தான் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. வள்ளலே வாழும் ஞானியே
வரலாறு படைக்க வந்த
வள்ளலே ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல்திங்கள்
குறைவிலா மூவாறு திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 18ம் நாள், 31.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க மஸ்தான் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் அரங்கன்
ஞானமே கலியுகத்தை காக்கின்ற
நல்சக்தி ஞானசக்தியாய் இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
ஏழாம்படைவீடு எனும் பிரணவகுடிலை
கருத்தாக அணுகி அரங்கமகானை
காக்கும் ஞானியாக ஏற்று
5. ஏற்றுமே மகாமந்திர தீட்சை அடைந்து
எந்நாளும் செபதபம் செய்து
ஆற்றல்பட அன்னதானமுடன்
அகிலத்தாரை சமமாக ஏற்று
6. ஏற்றுமே சாதிமத இனபேதமிலா
எல்லாம் கடந்து ஞானவான்களெனும்
ஒற்றுமைபட வாழ்க்கை நடத்தி
உலகமெங்கும் அறச்சேவை ஆற்றி
7. ஆற்றியே அரங்கன் சீடர்களெனும்
அடையாளம் கண்டுத் தேறிட
மாற்றம் செய்யும் சக்திகளாக
மக்களெல்லாம் ஞானிகளாக

8. ஆகவே நிலைகளும் தேறி
அகிலத்தில் அநீதிகளை மாற்றும்
மகத்துவம் கூடியே உலகோர்
மாண்புமிக்க ஞானஆட்சி படைப்பர்

9. படைப்பர் மக்களை காக்கின்ற
படைகளாக ஞான சக்திகளாக
தடைகள் அத்தனையும் வென்று
தரணியில் ஞானயுகம் படைப்பர்

10. படைக்கவே அரங்கனே முருகன்
பழுதில்லா ஞானசபை படைத்து
இடர்கள் அதர்வண சக்திகளென
எல்லாவற்றையும் அழித்து

11. அழித்து தன் சீடர்களென
அபயம் கொண்ட யாவர்க்கும்
அழியாமை தந்தருளும் ஞானி
அரங்கனால் பேருலகே மாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–